FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)

**Under Section 173 BNSS** (கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

8074745

C

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு
திருவண்ணாமலை

1. District மாவட்டம் : **Tiruvannamalai** PS காவல்நிலையம்: **V&AC** Year ஆண்டு **2024** FIR No முதஅ எண்: **12/2024** Date நாள்: **27.11.2024**

2. (i) Act சட்டம்: **The Prevention of Corruption Act 1988 as amended by The PC (Amendment) Act 2018.** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் **22.11.2024** | Date to : நாள் வரை

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **27.11.2024** Time நேரம் : **08.00 Hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **Vol - IV** Time நேரம் : **09.30 Hrs**

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக **Computer Typed**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் **15 Kms South**

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address முகவரி **Perumpakkam Village, Chengam Taluk, Tiruvannamalai Dt.**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.Ajith** | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **S/o. Sambasivam**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு **Age-29** | (d) Nationality : நாட்டினம் **Indian** | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் **Police** | (g) Address முகவரி **Che.Agram Village, Palippattu Post, Chengam Taluk, Tiruvannamalai Dt**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**1.Tr.Ranjithkumar, Surveyor , Perumpakkam Village, Chengam Taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் ------

------

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

------

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரனை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்துஅனுப்பப்படுகிறது.

திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான் 27.11.2024 ஆம் தேதி 08.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது புகார்தாரர் S. அஜித், வயது-29, த/பெ. சாம்பசிவம், சே. அகரம் கிராமம், பாலிப்பட்டு அஞ்சல், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்.7305451316 என்பவர் நேரில் ஆஜராகி, கணினியில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு கொடுத்தார். மேற்படி புகார் மனுவின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர் S. அஜித், வயது-29, த/பெ. சாம்பசிவம், சே. அகரம் கிராமம், பாலிப்பட்டு அஞ்சல், செங்கம் தாலுக்கா, திருவண்ணாமலை மாவட்டம். செல்.7305451316. பெறுநர் உயர்திரு. காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. அய்யா, நான் மேற்கண்டவாறு திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் தாலுக்கா, சே. அகரம் கிராமத்தில் எனது குடும்பத்தாருடன் வசித்து வருகிறேன். நான் BBA வரை படித்து தற்சமயம் தமிழ்நாடு காவல் துறையில் 2017-ம் ஆண்டு இரண்டாம் நிலை

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Ajith 28/11/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature]
Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
27.11.2024 at 0945hrs

Name: பெயர் R. ARUL PRASAD
Rank: நிலை Inspector of Police VAC Tiruvannamalai ............ No. எண் .........

காவலராக பணியில் சேர்ந்து தற்சமயம் சென்னை ஆயுதப்படையில் பணிபுரிந்து வருகிறேன். எனக்கு திருமணமாகிவிட்டது. எனது தகப்பனார் சாம்பசிவம் என்பவர் நான் சிறு வயதில் இருக்கும் போதே இறந்துவிட்டார். எனது தாயார் பெயர் சாந்தி ஆகும். என்னுடன் பிறந்த அண்ணன் ஒசூரில் தனியார் கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார். நான் தற்சமயம் கடந்த 18.11.2024 முதல் 10 நாட்கள் விடுப்பில் வந்து உள்ளேன். என்னுடைய தகப்பனார் சாம்பசிவம் பெயரில் எனது கிராமத்தின் அருகில் உள்ள பெரும்பாக்கம் கிராமத்தில் பூர்விக நிலத்தை அளந்து உட்பிரிவு செய்து எனது தாயார் சாந்தி பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்ய வேண்டி கடந்த 18.11.2024 அன்று 'இ' சேவை மையத்தில் Challan Number.20241118023162 dated.18.11.2024-ல் என்னுடைய தாயார் பெயரில் உட்பிரிவு செய்ய வேண்டி அதற்கான கட்டணத்தொகை ரூ.400/-த்தை செலுத்தி பதிவு செய்து உள்ளேன். இது சம்மந்தமாக கடந்த 22.11.2024-ந் தேதி எங்களுடைய கிராம உதவியாளர் அரி என்பவர் மற்றும் வந்த சர்வேயர் ரஞ்சித்குமார் என்பவரும் வந்து நிலத்தை அளவீடு செய்தனர். பின்னர் இருவரும் சேர்ந்து சொத்து சம்மந்தமாக EC எடுத்து கொண்டு பெரும்பாக்கம் கிராம் நிர்வாக அலுவலகம் வரச் சொல்லி சென்றார்கள். நானும் உடன் சென்று சந்தித்தபோது அலுவலகத்தில் சர்வேயர் ரஞ்சித்குமார் மற்றும் கிராம உதவியாளர் அரி ஆகியோர் இருந்தனர். நான் எனது சொத்து சம்மந்தமான EC நகலை சர்வேயர் ரஞ்சித்குமார் அவர்களிடம் கொடுத்தேன் அதை அவர் வாங்கி பார்த்துவிட்டு வெறும்கையுடன் வந்தால் வேலை ஆகாது உன்னுடைய தாயார் பெயரில் உட்பிரிவு செய்து பட்டா பெயர் மாற்றம் செய்ய எனக்கு ரூ.5,000/-த்தை இலஞ்சமாக கொடுத்தால் தான் நான் பெற்றுத்தருவேன் என்று கண்டிப்புடன் சொன்னார். நான் அதற்கு நானும் அரசு பணியில் தான் பணிபுரிகிறேன் என்று சொன்னதற்கு அவர் எங்களுக்கும் நிறைய செலவுகள் உண்டு இதனால் கண்டிப்பாக இலஞ்ச பணம் ரூ.5000/-ம் கொடுக்க வேண்டும் கொடுக்காவிட்டால் உங்கள் இடத்தை அளக்க முடியாது என்று கண்டிப்புடன் கூறினார். எனக்கு இலஞ்சமாக பணம் கொடுக்க விருப்பம் இல்லை. அவருடைய கட்டாயத்தின்பேரிலும், அதனால் தவிர்க்க முடியாத சூழ்நிலையிலும் என்னுடைய விருப்பத்திற்கு மாறாக கடந்த 22.11.2024 -ந்தேதி என்னுடைய வங்கி கணக்கில் சொந்த செலவிற்கு வைத்திருந்த ரூ.3000/-த்தை சர்வேயர் ரஞ்சித்குமார் அவர்கள் கேட்டுக்கொண்டதின் பேரில் அவருடைய மொபைல் எண். 6380747535 -க்கு கூகுல் பே மூலமாக அனுப்பினேன். அதற்கு அவர் சிரித்துக்கொண்டே ரூபாய் 3000 தான் வந்துள்ளது என்று சொல்லி திங்கள் கிழமை மீதமுள்ள ரூபாய் 2000 த்துடன்

பெரும்பாக்கம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வருமாறு கூறினார். நானும் கடந்த 25.11.2024 ந்தேதி திங்கள் கிழமை பெரும்பாக்கம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு சென்று பார்த்தபோது, அவர் வராத காரணத்தினால் மாலை சுமார் 5.00 மணியளவில் என்னுடைய மொபைல் எண்ணில் இருந்து சர்வேயர் ரஞ்சித்குமார் அவர்களுக்கு 6380747535 -ல் தொடர்பு கொண்டபோது, அவர் இன்று நான் அலுவலகத்திற்கு வரவில்லை. 27.11.2024-ந்தேதி புதன் கிழமை பெரும்பாக்கம் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வருவேன் என்றும் நான் கேட்ட மீதமுள்ள ரூ.2000/-த்தை கண்டிப்பாக எடுத்துவருமாறும் கூறினார். பின்னர் எனக்கு பட்டா பெயர் மாற்றம் செய்ய ஏற்கனவே ரூ.3,000/- கேட்டு பெற்று தற்போது கூடுதலாக என்னிடம் ரூ.2000/-த்தை இலஞ்சமாக கேட்ட சர்வேயர் ரஞ்சித்குமார் அவர்களுக்கு மேலும் இலஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லாததால், எனக்கு தெரிந்த நபர் மூலம் கணினியில் தட்டச்சு செய்து என்னிடம் இலஞ்சமாக ரூ.3,000/-ம் கேட்ட சர்வேயர் திரு.ரஞ்சித்குமார் என்பவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் மனு அளிக்கிறேன்.இப்படிக்கு, (SdXXXXX) S.Ajith 27/11/2024.

**Sir,**

Received the complaint on 27.11.2024 at 08.00 hrs and a discreet enquiry was made on the general reputation of the accused officer and it is learnt to be bad. The motives, reliability and the antecedents of the informant was also quickly verified and found nothing adverse. Since the information contained in this complaint discloses a cognizable offence, today on 27.11.2024 at 09.30 hrs a case was registered in Tiruvannamalai V&AC Cr.No.12/2024 u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the PC (Amendment) Act 2018. The FIR in original along with the complaint was sent to the Hon'ble Special Judge Cum CJM, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd/-XXXXX) 27/11/2024. R.Arulprasad, Inspector of Police, V&AC, Tiruvannamalai.

27.11.2024
Inspector of Police
V&AC Tiruvannamalai